(ஆ) ஆம் எனில், அக்கிராமங்களில் மின் அழுத்தத்தை சரி செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். மின் அழுத்தத்தைச் சீராக்க, குரியோடு பகுதியில் ஒருமுனை மின்னூட்டியை மும்முனை மின்னூட்டியாக மாற்றி அமைக்கவும் சாத்திர விளையில் ஒரு புதிய மின் பகிர்மாற்றி அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

488—

பங்குனி வாய்க்கால் தலைவாய்த்தலைப் பகுதியில் தூர் வாருதல்.

*11733—திருமதி ஜெ. லோகாம்பாள்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், மேல்அணைக்கட்டு பகுதியில் காவிரியின் வடகரையில் உள்ள பங்குனி வாய்க்காலில் நீர் வரத்தின்மையால் முசிறி, லால்குடி, அரியலூர் பகுதிகளில் உள்ள 40 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்களில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மேற்படி பங்குனி வாய்க்காலில் தலைவாய்த்தலை பகுதியிலிருந்து 11/2 கிலோ மீட்டர் தூரத்திற்கு தூர்வாரி சீர் செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பங்குனி வாய்க்காலில் வளர்ந்திருந்த சீமைக்காட்டாமணி செடிகள் மற்றும் தூர் முதலியன கடந்த மூன்று வருடங்களில் தேவைக்கேற்ப பராமரிப்பு நிதியிலிருந்து அகற்றப்பட்டு பாசனம் நடைபெற்று வருகிறது.

491—

திரு.வி.க. நகரில் தொழிலாளர்களுக்கான பொழுதுபோக்குமன்றம் கட்டுதல்

*16314—திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரு.வி.க. நகரில் தொழிலாளர்களுக்கான பொழுது போக்குமன்றம் ஒன்று கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?